# I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
# DEPOSITIONS OF WITNESSES
# (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
# DEPOSITIONS OF WITNESSES P.W.1
# OS.NO.56/2018(Joint Trial)OS.NO.24/2019,57/2018,66/2019)

**Name** : Lingamoorthy

**Father/Husband Name** : Sambasivam

**Age** : 58

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 04.12.2024**

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**குறுக்கு விசாரணை யின் தொடர்ச்சி(56/2018)**

கலா மற்றும் 7 நபர்கள்(56/2018) பிரதிவாதிகள் 1 முதல் 7 பேர்கள் மற்றும் தனலட்சமி என்பவரும் என் மேல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.அந்த வழக்கு காட்பாடி நீதிமன்றத்தில் தாகக்ல் செய்யப்பட்டு O.S.No. 24/2019 என்று இந்த நீதிமன்றத்தில் கோப்பில் உள்ளது என்றால் சரிதான்.

O.S.No. 24/2019 லும் O.S.No.56/2018 லும் சொல்லப்பட்டுள்ள வழக்கு சொத்து ஒன்று தான் என்றால் சரிதான். கோவிந்தசாமி கவுண்டர் என்னுடைய சித்தப்பா, சாம்பசிவம் என்னுடைய அப்பா. என் அப்பா அக்குவிடுதலை பத்திரம் எழுதி வாங்கினாரா என்றால் இல்லை. ஊர் பஞ்சாயத்தார் முன்னிலையில் எழுதி வாங்கினார்கள். கூர்சிட்டு எழுதி வாங்கினார்கள் அப்போது வயது 10 இருக்கும். 24.06.1992 அன்று சாம்பசிவம் என் அப்பாவிற்கு கோவிந்தசாமி கவுண்டர் சித்தப்பா பாக அக்குவிடுதலை பத்திரம் சர்வே **எண் 318/1 ல் காலி மனை 3536 சதுர அடி** கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

கூர்சீட்டு முன்னிலைக்கு அவரவர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் என் சித்தப்பா மற்றும் சித்தப்பா பிள்ளைகள் எனக்கே விற்று விட்டு சென்றுவிட்டார்கள் . எந்த தேதியிர் விற்றார்கள் என்று நினைவில்லை ஆவணம் உள்ளது. அந்த ஆவணத்தை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்திருக்கிறேன்.

நான் மேலே சொன்ன 24.06.1992 என்ற விடுதலை பத்திரத்தில் கண்டுள்ள சொத்து வேறு தாவா சொத்து வேறு என்றாலும் சரிதான். தாவா சொத்து உயிலில்

கண்டுள்ள சொத்து ஆகும். கூர்சீட்டு முன்னிலைக்கு போட்ட அந்த 50 சென்ட் கோவிந்தசாமி தான் இன்று வரை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த கூர்சீட்டு ஆவணம் ஒப்பு கொண்ட ஆவணம் என்றால் சரிதான். பன்னீர் செல்வம் மற்றும் நான் ஆகிய இருவரும் சாம்பசிவத்தின் வாரிசு என்றால்சரிதான். கலா மற்றும் 7 பேர் ஆகியோர்கள் கோவிந்தசாமி வாரிசுகள் என்றால் சரிதான்.( **அசல் வழக்கு 24/2019** ல் பதிவாகியுள்ளது).

கோவிந்தசாமி காலமானதற்கு பின்னர் மேற்படி 50 சென்டை அவரது வாரிசுகள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொல்வது சரியல்ல. கோவிந்தசாமியிடம் இருந்து என் தகப்பனார் தாவா சொத்து இல்லாமல் 17.10.1994 அன்று வேறு சர்வே எண்.**338/B3**, **340/2, 410/1** மொத்தம் 32 சென்ட் கிரயம் வாங்கினார்கள என்றால் என் அண்ணன் பன்னிர்செல்வத்திற்கு(முதல் வாதி in os no.**56/2018**) தான் தெரியும். அவர் இறந்து 1 வருடம் ஆகிவிட்டது.

நானும் என் அண்ணனும் காட்பாடி நீதிமன்றத்தில் அசல் வழக்கு **118/2013** தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்மீது உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்துள்ளோம் என்றால் சரிதான். அது சர்வே **எண். 324/1,** 1 ஏக்கருக்கு போடப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கானது காட்பாடி நீதிமன்றத்தில் கடந்த 29.06.2015 அன்று தள்ளுபடியான உத்தரவு இதுதான் என்றால் சரிதான். அதன் பேரில் நான் மேல்முறையிடு செய்துள்ளேன். அதன் சான்றிட்ட நகல். அதனுடைய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவயை ஆகிவை **பி.வா.சா. 1 மற்றும் 2** ஆகும்.

நான் மேற்படி வழக்கு போடுவதற்கு முன் **எண். 324/1,** 1 ஏக்கராவில் முழு உரிமை கோரி பிரதிவாதிகளிடம் தகராறு செய்தேன் என்றால் சரியல்ல.அவர்கள் தான் தகராறு செய்தார்கள். **எண். 324/1**, 1 ஏக்கராவில் எங்களுக்கு பாதி பிரதிவாதிகளுக்கு பாதி என்றால் சரியல்ல. நான் போட்ட தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் அவர்களுக்கிடைய தாவா சொத்து மற்றும் இதர சொத்துகள் சேர்த்து 18.06.2023 அன்று பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. காட்பாடி வழக்கு மீது தாக்கல் செய்யப்பட்ட மேல்முமறையீடு எண் எனக்கு தெரியாது. அது வேலூர் சார்பு நீதிமன்றத்தில் **AS 48/2015** என்று எண்ணாகியுள்ளது என்றால் தெரியாது. அந்த

வழக்கு 20.04.2017 அன்று தள்ளுபடியாகி விட்டது என்றால் தெரியாது. என் அண்ணனுக்கு தான் தெரியும்.

அதற்கு மேல் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்தோம். உயர் நீதிமன்றத்திலும் மனு தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான். அதற்கு பின் பிரதிவாதிகளிடமிருந்து சொத்தை பரிக்க வேண்டும் என்பதற்காக இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. காட்பாடி நீதிமன்றத்தில் அசல் **வழக்கு 118/2013** தாக்கல் செய்து அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு 29.06.2018 ல் தள்ளுபடியாக பிறகு தாவா சொத்தை அபகரிக்க வேண்டுமேன்று 03.07.2015 அன்று பன்னீர் செல்வம் அவர் மனைவி பேரில் பொய்யான செட்டில்மெண்ட செய்தார் என்றால் அவர் பங்கினை அவர் மனைவி மீது எழுதி வைத்தார். அந்த செட்டில்மென்ட்டின் சான்றிட்ட நகல் **ExB3**.

என்னுடைய குடும்பத்திற்கு கூர்சீட்டில் மொத்தமாக ஒதுக்கப்பட்டது சர்வே எண். 324 ல் 1 ஏக்கர் என்றால் சரிதான். கூர்சீட்டில் அந்த சொத்துகள் குறித்து கூறவில்லை. கூர்சீட்டில் எந்த சர்வே எண்ணும் குறிப்பிட வில்லை என்றால் சரிதான். மேல் பக்கம் கீழ் பக்கம் என்றுதான் குறிப்பிட்டுள்ளார்களே தவிர சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியாது. ஆதி மூல கவுண்டர் என் தாத்தா. அவருக்கு கூர்சீட்டில் எந்தவிதமான சொத்தும் ஒதுக்கவில்லை என்றால் தெரியாது. என் அண்ணன்தான் 12 வது வரை படித்துள்ளார். அவருக்கு தான் தெரியும்.

பிரதிவாதிகளை தாவா சொத்து குறித்து ஏமாற்ற வேண்டும் என்பதற்காக நாங்கள் போலியாக ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் எற்படுத்தினோம் என்றால் சரியல்ல. கலா மற்றும் 7 நபர்கள் தாக்கல் செய்த **OS No. 24/2019** சரியான வழக்கு என்பது சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI
Digitally signed by G SANTHI
Date: 2024.12.04 18:02:27 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.